இரண்டாவது இந்தக் கோவிலில் ஏற்கெனவே 1994-லேயும் குடமுழுக்குச் செய்யப்பட்டு இருக்கிறது. அடுத்து 2006-ல்தான் அதற்கான திருப்பணிகள் எடுத்துக்கொள்ள முடியும்; எனினும் நீங்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்தப் பிரதான வீதி மட்டுமல்லாமல், வேறுசில பணிகளுக்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும், குறிப்பாக அந்தக் கோவிலில் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடத்திற்காக 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல மேல்நிலைப் பள்ளியின் பிரதான கட்டடத்திற்கு, சிறப்பு மராமத்துப் பணிகளுக்காக, 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, தாங்கள் கேட்ட பிரதான வீதிக்கும் உரிய தொகை ஒதுக்கப்படும்; ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 154, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

154—

மாவட்ட நீதிமன்றக் கட்டடம்

***15755—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் மாவட்ட நீதிமன்றம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூரில் மாவட்ட நீதிமன்றத்திற்குப் புதியதாக கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தனி மாவட்டமாகப் பிரிந்து 4 வருடங்கள் ஆகிவிட்ட சூழ்நிலையில் மாவட்டத் தலைநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பது நம்முடைய அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. எனவே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க இனியாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1999 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு 30-7-1998-ல் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இப்போது இருக்கின்ற இடத்திலேயே அந்த நீதிமன்றம் செயல்படவேண்டுமென்ற சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. மேலும், அங்கே போதுமான இடம் இல்லை என்ற தகவலும் அரசிடம் இருக்கிறது. புதிய இடம் கிடைத்த பிறகுதான், நீதிமன்றக் கட்டடத்தைக் கட்ட முடியும். என்றாலும், மாவட்ட நீதிமன்றம் தொடங்குவது குறித்து ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 155, திரு. கோ. தளபதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.*

155—

பேரையூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்

***11501—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதித் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் நகரம் என்பது ஒரு வட்டத் தலைமையிடமாக இருப்பதாலும், அங்கு பல புதிய அலுவலகங்கள் ஏற்பட்டு இருப்பதாலும், புதிதாகக் குடிவரக்கூடியவர்களுக்கு வீட்டுவசதி இல்லாத நிலைமை இருப்பதாலும்,*